வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண்.**SC.No.142/2021**

வழக்கு சாட்சி **- PW-** 2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | :: **பத்திரகாளி** | **ஜாதி** | :: |
| **தந்தை பெயர்** | :: | **தொழில்** | :: |
| **கிராமம்** | :: | **சமயம்** | :: |
| **தாலுகா** | :: | **வயது** | :: |

Solemnly affirmed in accordance with the provisions of Act I of 1873 of the day of 09.10.2023

( எதிரிகள் 1 , 3 ஆஜர். இரண்டாம் எதிரிக்கு எதிராக நீண்ட நாட்களாக பிடிகட்டளை நிலுவையில் இருந்த நிலையில் ஜாமீன்தாரர்கள் நடவடிக்கை குவிமுச.446 ன் கீழ் எடுக்கப்பட்டு பிணைமுறி பறிமுதல் செய்யப்பட்டு 2 ஆம் எதிரிக்கு எதிரான வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டது. குவிமுச. 82 பிரிவின் கீழான நடவடிக்கைக்காக நிலுவையில் இருந்த நிலையில் Parent Case SC No. 142/2021 வழக்கின் சாட்சிய விசாரணை எடுக்கப்பட்ட நிலையில் தலைமறைவு 2 ஆம் எதிரிக்கு எதிரான SC No. 80/2023 வழக்கிலும் குவிமுச. 299 ன் கீழ் சாட்சிகளின் விசாரணை பதிவு செய்யப்பட்டது.)

**முதல்விசாரணை**

நான் மண்டபத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மோகன்ராஜ் எனது கணவர். எதிரிகளை தெரியும். கடந்த 29.03.2021 அன்று காலை 11.15 மணியளவில் நானும் என் கணவரும் வீட்டிலிருந்தோம். எதிரி கௌசல்யா என் கணவரின் அக்கா. என் கணவருக்கும் எதிரி கௌசல்யாவிற்கும் சொத்து பிரச்சனை உள்ளது. என் கணவருக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் பூர்விக சொத்து உள்ளது. அதில்

ஒவ்வொருவருக்கும் நான்கு பங்கு உள்ளது. அந்த சொத்து சம்பந்தமாக என் மாமியார் காலத்திலேயே பிரச்சனை இருந்தது. அதன் காரணமாக மேற்படி தேதியில் கௌசல்யா எங்கள் வீட்டிற்கு வந்து வாசலில் நின்று கொண்டு கெட்ட வார்த்தையால் பேசினார். கௌசல்யாவுடன் சண்முகவேலு, துரை ஆகியோர் வந்தார்கள். சண்முகவேலு வாள் வைத்திருந்தார். துரை அருவாள் வைத்திருந்தார். துரை என் கணவரை மிரட்டி சொத்து கொடுக்கவில்லை என்றால் கொன்றுவிடுவேன் என்று சொன்னார். நான் கதவை சாத்திவிட்டு உள்ளே சென்றுவிட்டேன். நாங்கள் குடிவைத்திருந்த வாடகைதாரர்களையும் மிரட்டினார்கள். அதனால் அவர்கள் காலி செய்துவிட்டார்கள். இது சம்பந்தமாக என் கணவர் மண்டபம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். மண்டபம் காவல்நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை இல்லை.

ஓம்.கே.கவிதா
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.